**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**<u>CC.NO-90/2022</u>**

**List of Witness LW1 Examined as PW1 ( Complainant )**

| | | | |
|---|---|---|---|
| Name | மோகன்தாஸ் | Age: | 46 |
| Father’s name | சீனிவாசன் | Calling: | விவசாயம் |
| Village | மோகனூர் | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.08.2025

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 16.04.2014 ஆம் தேதி நானும் ஆஜர் எதிரியும் கூட்டாக பால் பண்ணை ஆரம்பித்தோம். அது தொடர்பாக கல்லாக்கோட்டை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் எங்கள் இருவர் பெயரிலும் Joint Account ஆரம்பித்தோம். பின்னர் 05.11.2018 ஆம் தேதி எதிரியிடம் நான் கணக்கு வழக்கு கேட்டேன். அதற்கு எதிரி என்னை பால் பண்ணையில் இருந்து நீக்கி விட்டதாக கூறினார். 30.11.2019 வரை எதிரி 35 காசோலைகளில் எனது கையொப்பத்தையிட்டு ரூ.10,47,700/- தொகையை வங்கியில் இருந்து எடுத்துள்ளார். இது சம்மந்தமாக கந்தவர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், புகார் மனு நான் கொடுத்தது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள். புகார் அளித்த போது போலிசாரிடம் எங்களது Joint Account வங்கி கணக்கு அறிக்கையை கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு அறிக்கை தான் நான் போலிசாரிடம் கொடுத்தது ஆகும் **( 10.11.2018 தேதி முதல் 04.12.2019 தேதி வரையிலான வங்கி கணக்கு அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**